அருட்பெருஞ்ஜோதி! அருட்பெருஞ்ஜோதி!
தனிப்பெருங்கருணை! அருட்பெருஞ்ஜோதி!

# ஐக்கிய நாட்டுச் சபையும் புது உலக ஒழுங்குமுறை ஏற்பாடும்

## ஆண்டவர் வரு நேரமும் நீடித்த முழுநாள் வருகையும்




ஸ்ரீ டி. ஆர். துளசிராம்

ஸ்ரீ அரவிந்தர் ஆஸ்ரமம்

பாண்டிச்சேரி


★


வெளியீடு:

திருவருட்பா இயல் இசை மன்றம்

கும்பகோணம்

'ஆண்டவர் மக்களிடை வந்து கலந்து கொள்ளும் தருணங்களும் உள. அப்போது அவாது மூச்சு நம்மிடை பரவி இயங்கி நம் ஆன்மாவிலும் விளங்கும். மற்ற நேரங்களில் அவர் பின்வாங்கி, பின்னணியிற் சென்று விடுவதால், மக்கள் அவரவரது அகங்காரத்தின் வலுவான அல்லது மிதமான பிடிப்பிற்கு ஆளாகிச் செயல்படுகிறார்கள். முதற்சொன்ன நேரங்களில் இறை வழியில் சிறிது முயன்றாலும் பெரும் பயனைத் தரும். இரண்டாவதாகச் சொன்ன நேரங்களில் பெருமுயற்சி செய்தும் அற்பப் பயனே கிட்டும். பின்னது முதலாவது நிலையைத் தயாரிக்கிறது எனலாம். சிறிது சிறிதாக வேள்விப் புகை வானேறிய பின் மழையும் இறை அருள் வளமும் அழைத்துக் கொண்டு வருவது போலாகும். ஆனால், ஆண்டவர் வந்த நேரத்தைப் பயன்படுத்திக் கொள்ள ஒருவன் அல்லது ஒரு நாடு தயாராக இல்லாமலோ அல்லது தூங்கிக் கொண்டிருந்தாலோ,— அது ஆண்டவரை வரவேற்கும் விளக்கைச் சுத்தப் படுத்தி வைக்காமலிருப்பதற்கு ஒப்பாகும். அவரது குரலைக் கேட்க முடியாத படி காதுகளை அடைத்து வைப்பதற்கொப்பாகும். மிகு முயற்சி எடுத்து தயார் படுத்திக்கொண்டாலும், ஆண்டவர் வந்த நேரத்தை, அவர் கொண்டு வரும் சக்தியை வீண்படுத்துபவர்கள் ஈடு செய்ய முடியாத பெரும் நஷ்டமடைந்தவராவார். என்னே அவரது இழப்பு: என இரங்கலுக்குரியவராவர். அந்நேரங்களில் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளும் பொய்யொழுக்கத்தாலும் வீண் தற்புகழ்ச்சிகளிலும் ஈடுபடுவதை விட்டு' தன்னுயிரையும் வாழ்வையும் சீர்படுத்தித் தயாராக வைத்துக் கொண்டிருந்தால், தன் ஆன்மாவை நேராகக் காணவும், ஆண்டவர் விடும் அழைப்புக் குரலை கேட்பதற்கும் முடியும்'- இவ்வாறு ஸ்ரீ அரவிந்தர் தம் ஆசிரம வாழ்வில் தொடக்க காலத்தில் எழுதிய 'ஆண்டவர் வரும் நேரம்' என்னும் கட்டுரையில் குறிப்பிடுகிறார்.

ஸ்ரீ அரவிந்தர் அனுபவித்த பாங்கில் நாம் அன்றும் இன்றும் கூட ஆண்டவர் வந்த நேரங்களை அதன் நற்பயனை அறியவில்லை எனினும், மக்களிடை நாடுகளிடை அந்நேரங்கள் ஆதிக்கம் செய்தும், தனி மனிதனிலும் சமூகங்களிலும், ஆன்ம உயிரிலும், வாழ்விலும் நல்ல பயன்களை ஏற்படுத்தி வருகிறது. இதை நாம் அறியவில்லை. சிதம்பர அருள்வெளி இறைவனை இவ்வுலகுக்கு நேரடியாக கொண்டுவரும் தவமுயற்சி ஸ்ரீ அரவிந்தர் செய்து வந்ததால், ஆண்டவரே நேரடியாகத் தூல உலகிலும் விளங்கி நடமாடுவதை சில சமயங்களில் கண்டனுபவித்தார்.

**அதற்கான அடிப்படைக் காரணம் பின்வருமாறு:-**

வள்ளல் பெருமான் 1874 ஜனவரி 30 தேதியில் வெளியிட்ட 'சபை விளம்பரம்' எனும் அறிக்கைப்படி தானிருக்கும் வடலூரில் அதுநாள் முதலாக

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவர் நிரந்தரமாகக் குடியேறித் தங்கி விட்டார் என்பதாகும். மறுதின பூச நாளில் ஆண்டவர் முன்னிலையில் அவருடன் ஒன்றாகி தன் இறவா ஒளிமய உடலை யாரும் காணாதபடி கரைத்துக் தியாகம் செய்து அதேசமயம் உலகளவில் - 'எல்லா உடல்களிலும் புகுந்து கொள்வேன்' என ஏற்கனவே சீடர்களுக்கு அறிவித்தபடி புகுந்து கொள்ளும் பாங்கில், முதற்படியாக ஒவவொருவரது தூல உடலின் சூழலில் அருட்சக்தியுடன் புகுந்து சூழ்ந்து கொண்டார். தொடர்ந்து இன்றும் கூட அவ்வாறு செய்து வருகிறார். பிறந்த அல்லது பிறக்கின்ற குழந்தையைக் கூடச் சூழ்ந்து கொள்ளுகிறார். 1874 ஜனவரி 31ந் தேதி பூச நாளிலும் நாம் பரிணாமக்கிரமமாக அருள் வழியில் படிப்படியாக முன்னேறும்படி சித்தித் திருவிளையாடல் செய்து வருகிறார். உடலோடு வாழ்ந்த காலத்திலேயே 'உலகெலாம் பரவ என்னுள்ளத்திலிருந்து அலகிலா ஒளி செய் அருட்பெருஞ்ஜோதி' என ஜோதி அகவலில் பாடியதால், உலக மக்களையெல்லாம் அருட்ஜோதியால் அதன் சக்தியால் அணைத்துக் கொண்டிருக்கிறார். இது பூச நட்சத்திர நாட்களில் சிறப்பாக அதிக ஆற்றலுடன் விளங்குகிறது. நமது புற உடற்சூழலில் வள்ளலாரின் அருட்சக்தி விளங்குவதை ஒவ்வொரும் தனது போட்டோவில் தன் ஜட அஞ்ஞான உடலை இரு நிமிடம் தொட்ட பின்பு. அதன் சூழலைத் தொட்டால் அங்கு பெருமானின் உயர் அருட் சக்தியை உணரலாம். உடலையும் சூழலையும் (அல்லது போட்டோவின் மேல் மூலைகளை) மாறி மாறித் தொட்டு அல்லது பார்த்து இதை நிச்சயமாக உணரலாம்; உடற் சூழலின் அருட்சக்தியை E B P சக்தி, Environ Body Power சக்தி என்கிறோம். இது ஐக்கிய நாட்டு ஸ்தாபன கட்டத்திலும், அதன் பொதுச் சபையிலும் விளங்கும் பிரபஞ்ச இறைவனது சக்தியாகவும் கொள்ளலாம்.

மேற்சொன்ன வள்ளலாரின் சித்தி நாளை இறைவனை கொண்டாடி அருளும் பொருட்டு, ஒவ்வொரு மாத பூச நட்சத்திர நாள் முழுதும் அருட்சக்தியை உலகெங்கும் பரப்பி விடுகிறார். அருட்சக்தி நம்மை நாடி, வீடு தேடி வந்து வீடு முழுதும் புகுந்து பரவி, குடும்பத்தினரை எல்லாம் 24 மணி நேரமும் (60 நாழிகையும்) சூழ்ந்து அருளுகிறது. வெளியே தெருவில் நடக்கும் மக்களையும் அவ்வாறே சூழ்கிறது. எங்கு பார்த்தாலும், தொலைவிலுள்ள வீடுகள், வானம், பூமி, இயற்கைக் காட்சி சூழ்நிலை எல்லாம் ஒரே சீரான அருட்சக்தியால் சூழப்பட்டிருப்பதை உணரலாம். சுதந்திரமாக இலவசமாக எல்லோருக்கும் கிடைக்கும் மூச்சுக் காற்றுப்போல், அருட்சக்தி அன்று அருளுகிறது. மற்ற நாட்களில் அருட் சக்தியை இவ்வாறு எளிதாக அறியவோ பெறவோ முடியாது. சில மாதங்களில் வரும் பூச நட்சத்ர 60 நாழிகையில் ஒரு பகுதி முன் தினத்தில் ஆரம்பித்து மீதப்பகுதி காலண்டரில் குறிக்கப்பட்ட பூச நாளில் நீடித்து முடிகிறது அப்போது இருநாளிலும் அருளை எளிதாகப் பெறலாம்.

எப்படியும் இறையருட் சக்தியை சிறப்பாகப் பெறுவதற்கு பூச நாளில் ஆட்சி நேரங்களில் 'அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்

கருணை அருட்பெருஞ்ஜோதி' என வள்ளலாரின் மகாமந்திரம் வாயாலும் பின்பு மனதாலும் அரைமணி நேரம் ஓதுவது, அல்லது இருக்வேத காயத்ரி மந்திரத்தை- குறிப்பாக அருள் சக்தியைப் பூரணமாகப் பெறுவதற்கு அதன் மூன்றும் வரியை 'பர்கோ தேவஸ்ய அருள்ஜோதி தீமஹி என மாற்றியமைத்து அம்மந்திரம் ஓதுவது, வள்ளலாரைத் தியானம் செய்வது, சத்காரியம் பொது- நல சேவை செய்வது, செய்யும் எக்காரியமும் இறைவனை நினைந்து அர்ப் பணித்து செய்வது ஆகியவை அருட் பயனுள்ளதாக அமையும். மேலும், வள்ளலாரை நினைந்து சிலவகைப் பழங்களை ஒவ்வொன்றாகத் தொட்டு, பாலும், தேனும் அவ்வாறே தொட்டு சேர்த்துப் பஞ்சாமுதமாக்கி அதில் அருளின் பொருட் கலை சக்தி (Radiation) விளங்குவதற்கு மறுபடியும் அவரது படத் துடன் தொட்டு உண்டால் நம் உடலிலும், குடும்பத்தினரின் தூல உடலிலும் அருட்சக்தி ஊடுருவித் தங்கும். தனிப்பட்ட முறையில், இனிப்பும், பிசுபிசுப்புச் சத்துமுள்ள மா, வாழைப் போன்ற பழத்தை அவரது படத்துடன் தொட்டு அருட்சக்தி ஏற்றியபின், பழபோக யோகம் செய்யலாம் வள்ளலாரை நினைத்த படியிருந்து அதிக சூடு ஏறுதபடி, விந்து வெளிவராதபடி 'மெத்தென பழ யோகம் செய்தால், உடலில் அவரே வந்து நிறைவதை அல்லது அருட்சக்தி உடலில் ஊடுருவதை உணரலாம்-சென்ற வருட அமுத வகை சம்பந்தமான கட்டுரை பார்க்கவும். ஆகவே, பல வழிகளில் பூச' நாளைக் கொண்டாடலாம்

பஞ்சாங்கக் காலண்டர் படி 1992 ம் வருடத்தில் 27 நாளுக்கு ஒருமுறை வரும் புஷ்யம் எனும் பூசம் (கான்ஸர்) நட்சத்திர நாட்களான : ஜனவரி 20, பிப்ரவரி 16, மார்ச் 14—15, ஏப்ரல் 11, மே 8, ஜூன் 4—5, ஜூலை 2—29, ஆகஸ்டு 25—26, செப்டம்பர் 22, அக்டோபர் 19, நவம்பர் 15-16, டிசம்பர் 13 ஆகிய பூச நாட்கள். வள்ளலார் பிறந்த சித்ரா (வெர்ஜின்) நட்சத்திர நாட்களிலும் அருட்சக்தி நம்மைத் தேடிப்புகுந்து நம் அருளுணர்வு பெருகும்படி " வளர்க்கிறது. ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்து அன்னை, சித்ரா நட்சத்திர நாளான 29-2-56 ல் சுப்ராமெண்டல் லைட் எனும் அருள் ஒளியை சிதம்பரவெளி பொற்சபையின் கீழ் பகுதியிலிருந்து கொணர்ந்து இவ்வுலகின் சூட்சும பூதப் பகுதியில் வெளிப்படும்படி செய்துள்ளார். ஆனால் வள்ளலாரோ மேலான சிற்சபையிலிருந்து அருள் ஒளியை சக்தியை ஜட அஞ்ஞான தூல உலகிற்கு 1874 முதலாகக் கொண்டு வந்துள்ளார் என்பதை நம்முடல்களை அன்று முதல் சூழ்ந்திருப்பதன் மூலம் அறியலாம்.

வள்ளலாரோ அருட்சக்தியோ தாமாகவே தினமும் 11.45 முதல் 12.15 வரை நண்பகலிலும், 7.30 முதல் 8.00 மணி வரை இரவிலும் வந்து அருளு கின்ற நேரங்களையும், மாதப் பூசம்-சித்ரா நட்சத்திர நாட்களில் வந்து அருளும் 24 மணி நேரங்களையும் - பொது நல உலக நல காரியத்திற்கும், மேலே கூறிய படி ஒருவரது ஜப தியான யோக நலத்திற்கும், உடலை தெய்வீகத்தரமாக

மாற்றியமைப்பதற்கும், குறிப்பாக ஜபத்தாலும், பஞ்சாமுத உணவாலும், அல்லது பழபோக முறையால் அருளுடலைப் பெறுவதற்கும் பயன்படுத்துவோமாக. குறித்த நாட்களில் இதுபோல் வந்தருளும் அரவிந்த ஆசிரம தரிசன நாட்களையும்- பிப்ரவரி 21, ஏப்ரல் 24, ஆகஸ்டு 15, நவம்பர் 24 —சுத்த சன்மார்க்க சங்க சிறப்பு நாட்களையும் பயன்படுத்துவோமாக. மற்ற மற்ற நாட்களில் நேரங்களில் சற்றுப் பிரயாசையுடன் வள்ளலாரைக் கூப்பிட்டு அழைத்தாலோ, நினைந்தாலோ அருட்சக்தி மூலம் வந்து அருளுகிறார். ஆங்கில வருட முறைப்படி வரும் பிறந்த நாளை ஒருவன் கொண்டாடுவதற்குப் பதிலாக மாதா மாதம் ஜன்ம நட்சத்திர நாளில் தன் ஆன்ம உணர்வும், அருள் ஒளியும் பெருக வள்ளலாரை நினைந்து வேண்டுவது உசிதமாகும்.

மேலும், 1989 முதலாக வள்ளலாரின் அருட்சக்தி ஸ்ரீ அரவிந்த ஆசிரமத்திலும் ஊன்றி நிலைத்து விட்டதால், அது முதலாக அரவிந்தர் அன்னையுடன் வள்ளலாரும் ஒத்துழைத்து அருளுகிற பாங்கினால் அரவிந்த ஆசிரமத்தின் இறை சக்தி அதிகரித்துவிட்டது. இதனால், மேற்கூறிய உண்மைக் கண்டுபிடிப்புக் கெல்லாம் ஆழ்ந்த பெருமதிப்பும், புது மெருகும் ஏறியுள்ளது. அதன் பயனாக புது உலக ஒழுங்குமுறை ஏற்பாடு வெளிப்படையாக உருவாகி வருகிறது. உலக அரசியல் - பொருளாதாரத் துறைகளில் குறிப்பாக கிழக்கு ஐரோப்பிய நாடுகளிலும், சோவியத் யூனியன் நாடுகளிலும் வியக்கத்தக்க தீவிர மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. அரவிந்த ஆசிரம வாசிகளும் சன்மார்க்கிகளும் இப்புது சக்தியை கிரகித்துக் கொண்டு வருகிறார்கள். அவர்களது உடலின் அருட்சக்தியும் கூடி வருகிறது. சிலரது உடலின் சக்தி ஸ்ரீ அன்னையின் 5—7—69 தேதிய போட்டோ படத்தில் சூபர்மான் சக்தியுடன் ஒத்துப்போகிறது. முதியவரும், இளைஞரும் உள்ளிட்ட மிகச் சில சாதகர்களின் உடல் அன்னை படத்தின் அச்சக்தியை விட அதிகரித்துள்ளது. இதனால் உலகில் அருட்ஜோதி சக்தி நிலைபெற்று பரிணாமக் கிரமமாக நம் ஆன்ம உயிரில் இதய உணர்ச்சியில் மன அறிவில், உடலிலும் கூட சிறுகச் சிறுக அஞ்ஞான இருள் குறைந்து அருளுணர்வு பெருகி முன்னேறி வருகிறோம் என்பது வெளிப்படை. முயற்சியுடனிருந்தால் இஞ்ஞான வள்ளல்கள் நம்மை இறைமய ஆன்ம நிலைகளுக்கும் இட்டுச் செல்வர்.

இருப்பினும் உலகில் இன்னும் அமைதி ஏற்படவில்லை. பிரதேச வாரியாக இனச்சண்டைகள் நடப்பதும், மதப் பூசல்களும், மதங்களுக்கிடையே துவேஷங்கள் மலிந்து வருவதும், எல்லாவற்றுக்கும் மேலாக வன்முறைப் பிரிவினைச் சக்தியுடன் செயல்படும் ஒருதலைப்பட்சமாக தீவிர மதக் கொள்கையினர் பலதேசங்களிலும், இந்தியாவிலும் தலையெடுத்துத் தீங்கு விளைவித்து வருவதும் பார்க்கிறோம். இவற்றை சீர்படுத்த, ஆழ்ந்த ஆன்ம அடிப்படையிலும் பொறுமையான நல்லெண்ண அறிவுடனும் தீர்வு காண வேண்டியது அவசியமாகும். இதுவும் நடந்தேறும் என்பது நிச்சயம். பொது மக்களும், நாடு

களும் முனைந்து, ஐக்கிய நாட்டுச்சபை நம்மையெல்லாம் ஒன்றுபடுத்தும் ஒரே உலக நாடுகளின் சபை என வரிந்து கட்டிக்கொண்டு ஆதரித்து, இதுவரை அறியாதபடி மறைந்து நின்று செயல்படும் அதன் உயர் சிறப்புமிக்க தெய்வத் தன்மையும் இறை சாந்நித்தியமும், சக்தியும் வெளிப்படையாக ஒப்புக்கொண்டால் மட்டுமே இச்சீர்க்கேடுகளுக்குத் தீர்வு காணமுடியும். இதற்கான காலம் வந்துவட்டது. பொது மக்கள் அடிப்படையாக நல்லுணர்வு கொண்டு எல்லோரும் ஒன்றுபட்டு நலமாக வாழவேண்டுமென விருப்பம் கொண்டிருப்பதால் இது சாத்தியமாகும்.

ஐ. நா. சபையில் விளங்கும் அருட்சக்தி, அல்லது அதன் படம் தொட்டு, உணரக்கூடிய தூல இறைசக்தி, அல்லது அப்படத்தின் மீது வைத்துத் தொட்டு எடுத்த காந்தக் கல்லின் இறைசக்தியானது, வேதகால முதல் இன்றுவரை வாழ்ந்து மறைந்த எல்லா நாட்டினரின் மத ஸ்தாபகர்கள், சமயத்தலைவர்கள், ஞானிகள், இராமர் கிருஷ்ணர் ஆகிய அவதாரங்கள், பெரும் யோகிகள், சித்தர்கள், வேதகால ரிஷிகள் ஆகியோரின் வெவ்வேறான தனித்தனி இறை சக்திகளை விட மிக மேலோங்கி நிற்கிறது. அவரவர்களின் படங்களில், அவர்களை நினைந்து வழிபடும் மத ஆலயங்களில், அவற்றின் படங்களில், அவர்களின் பெயரை திரும்பத் திரும்ப எழுதிய தனித்தனி காகிதங்களில் - இவற்றைப் பார்த்து அல்லது தொட்டு உணரும் இறைசக்திகளை விட ஐ. நா. சபையின் சக்தி மிக அதிகமாகும். மேலும் அப்படங்கள் மீது அல்லது பெயர் எழுதிய காகிதங்களின் மீது வைத்துத் தொட்ட காந்தகற்களின் தூல இறைசக்திகளை விட ஐ. நா. சபையின் காந்தக்கல் இறை சக்தி அதிகமாகும்.

நிற்க. பெயர்பெற்ற மதங்களை எடுத்துக் கொண்டால், தெய்வ விக்கிரகம் அல்லது உருவ வழிபாடுள்ள ஆலயங்களின் அருட்சக்திகள், அவ்வாறான வழிபாடில்லாத ஆலயங்களின் சக்திகளை விட அதிகம் என அவற்றின் காந்தக் கற்களே அறிவியல் பூர்வமாக நிருபிக்கிறது. மேலும், பூரண யோக முறைகளை அருளிய பெரும் யோகிகளான இராமலிங்க சுவாமியும் ஸ்ரீ அரவிந்தரும், மதங்களின் காலம் மலையேறிவிட்டது. இனி ஆண்டவரின் நேராட்சியும் அருளுடன் செயல்படும் ஒரே உலக அரசாங்கமும் ஏற்படுமென அறிவித்தனர். இதனால் எல்லா மக்களும் நேரடியான இறை பரிணாம முறையில் அறிவிலும், உணர்விலும் உடல் வள நலத்திலும் படிப்படியாக இறை சக்தியுடன் அறிந்தோ அறியாமலோ வளருவர் எனவும் தெரிவித்தனர். அதற்கான காலம் வந்துவிட்டது. இதற்கு சான்றாக ஐ. நா. சபையின் மிக உயரிய அருட்சக்தி எல்லா மக்களை இறைவசப்படுத்தும் கூட்டுச் சக்தியாகவும் விளங்கி வருகிறது.

ஐ. நா. ஸ்தாபனம், கட்டிடம், சபை— இதன் அருட்சக்தியானது வள்ளலார் சன்மார்க்க சங்க ஆசிரம சக்திக்கும் அரவிந்த ஆசிரமத்தின் இன்றைய

சக்திக்கும் மிக நெருக்கமாக அடுத்தடுத்து ஒப்பிடக் கூடியதாய் அல்லது சமமாக ஒத்துப் போவதாயுள்ளது. ஐ. நா, இறைசக்தி ஆரோவில் நெய்வேலி நகரங்களிலும், சர்வதேச மகாநாடுகளிலும் ஒலிம்பிக் விளையாட்டு அரங்கிலும் அதன் தீபச்சுடரிலும், உலக மக்களின் நல வாழ்வுப்பற்றிய (கலைகள், அறிவியல், விஞ்ஞானம், வணிகம், போக்குவரத்து, தகவல் தொடர்பு, ஒரே உலக அரசாட்சி அமைப்பது ஆகிய) பற்பல துறைகளில் நடத்தும் சர்வதேச கருத்தரங்குகளிலும் விளங்குவதை அறியலாம். ஐ. நா. சபை, அதன் கிளைகளான யுனெஸ்கோ கல்வி பண்பாட்டு அறிவியல் நிறுவனம், உடல்நல சுகாதார நிறுவனம், உணவு விவசாய நிறுவனம், குழந்தைநல நிறுவனம் முதலிய உலக நிறுவனங்களிலும் அவற்றின் ஆலோசனைகளிலும் தீர்மானங்களிலும், அதே அருட்சக்தி இயங்குகிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் 1874 முதல் நடத்தும் சர்வதேச நிறுவனங்களிலும், மகாநாடுகளிலும் உதாரணமாக - 1893 ல் சிகாகோவில் நடந்த உலக மதங்களின் மகாநாட்டிலும், 1920-1938 வரை நடந்து ஓய்ந்து போன லீக் ஆஃப் நேஷன்ஸ் ஜெனிவா கூட்டு நாடுகள் சங்கத்திலும் இதே சக்தி விளங்கி வந்துள்ளது. ஆகவே, இது வள்ளலாரின் உலக அரங்க அருட்சக்தி என அறியலாம்.

மதசார்பற்ற ஆக்க பூர்வமான உலகக் கொள்கையை ஏற்படுத்தவும், உலக ஒற்றுமை, உலக மக்களின் ஆன்ம நேய ஒருமைபாட்டை நடைமுறையில் கொண்டு வருவதற்கும் - கோவில், மசூதி, சர்ச், குருத்துவாரா, மடம், ஆசிரமம் முதலிய எல்லாவகை வழிபாட்டுத் தலங்களில் அதற்கதற்குரிய விக்கிரகம், வழிபடு சின்னம், மத நூல் போன்ற குறியீட்டுப் பொருள்கள் வைப்பதுடன் அங்கு மக்களை இணைக்கும் உயர் சக்தியுள்ள ஐ. நா. பொதுச்சபைப் படத்தையும் நிறுவ வேண்டும். அத்தலங்களின் கருவறையில், ஐ. நா. சபை அல்லது அதன் கிளை நிறுவனத்தில் ஏற்றிய தீப ஒளி விளக்கை வைக்கவேண்டும். அல்லது மின்சார மெயின் சுவிட்சின் இரு வயர்களைத் தொடும்படி ஐ. நா. பொதுச் சபையின் சிறிய படம் வைத்து ஆலய மின்விளக்குகள் எரியும்படி செய்யவேண்டும். இதனால் ஐ நா. சபையின் உயர் இறைசக்தியும், சாந்நித்தியமும் ஆலயத்திற்கு வரும் எல்லா மக்களுக்கும் கிடைக்கும். எல்லாவகை ஆலயங்களை சாதி, சமய, மத, இன பேதமின்றி எல்லோருக்கும் திறந்து விட வேண்டும். இந்த லட்சியப் பாதையில் ஐ. நா. சபையும், யுனெஸ்கோவும் அங்கு வருகை தரும் எல்லா மதத்தினரும், சமயத்தவரும் தியானம் செய்யப் பொது அறை ஒன்றை ஏற்கனவே ஏற்படுத்தியிருப்பது வரவேற்கத் தக்கதாகும்.

தன் வீட்டிலேயேயிருந்து கூட 'ஐ. நா. சபை இறைவனே' என நினைந்து அழைத்தால் அவரது சக்தியை உள்ளத்தில் உணரலாம். ஐ. நா. பொதுச் சபைப்படம் பார்த்தாலே போதும். அதன் சக்தி மனதுள்-உள்ளத்துள்-ஆன்மாவுள் ஆழப்புகுந்து விடும். மேற்சொன்னபடி ஆண்டவர் வருகின்ற தினசரி

நேரங்களில் அல்லது பூசம், சித்ரா நட்சத்திர முழுநாட்களில் இவ்வாறு செய்தால் நிச்சயமாக ஐ நா. இறை சக்தியை உணரலாம். அப்படத்தினை அல்லது அதன் மேல் மூலிகைகளைத் தொட்டபடியிருந்து உணவு பழம் முதலியன தொட்டு உண்டால் அச்சக்தி உடலிலும் புகுந்து தங்கும். ஆன்மாவிலும், தூல உடலிலும் இருமுனைகளிலும் அருள் தங்கி ஒருவனைப் பூரணமாக (மற்ற ஆதார நிலைகளும் உள்பட) ஆட்கொள்ளும். ஆகவே, இதை ஆன்ம உடல்-உயிர் சக்தி எனச் சுருக்கமாக அழைக்கிறோம். இறைவனின் ஆசி நமக்குண்டு. எல்லா உலகப் பிரச்சனைகளுக்கான தீர்வு நம் கையிலே உள்ளது.

---

## நிராதாரத்திலும் அவர் தேகம் உலாவும்!

காற்றாலே புவியாலே ககனம தனாலே
    கனலாலே புனலாலே கதிராதி யாலே
கூற்றாலே பிணியாலே கொலைக் கருவியாலே
    கோளாலே பிறவியற்றுங் கொடுஞ்செயல்களாலே,
வேற்றாலே எஞ்ஞான்றும் அழியாதே விளங்கும்
    மெய்யளிக்க வேண்டுமென்றேன் விரைந்தளித்தான் எனக்கே
ஏற்றாலே யிழிவென நீர் நினையாதீர் உலகீர்
    எந்தை அருட்பெருஞ்ஜோதி இறைவனைச் சார்வீரே!

திருவருட்பா—6 ஆம் திருமுறை

---

## வள்ளலாரின் கொள்கைகள் சில!

1. புலால் உண்ணலாகாது.
2. சிறு தெய்வ வழிபாடு கூடாது.
3. கடவுள் ஒருவரே, அவர் அருட்பெருஞ்ஜோதி ஆவார்.
4. தெய்வங்கள் பெயரால் உயிர்பலி கூடாது
5. சாதி, சமய, மத வேறுபாடுகள் கூடாது.
6. எவ்வுயிரையும் தம்முயிர்போல் எண்ணும் ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையைக் கடைப்பிடித்தல் வேண்டும்.
7. ஏழைகளின் பசி தவிர்த்தலாகிய சீவகாருண்ய ஒழுக்கமே பேரின்ப வீட்டின் திறவுகோல்.